CC 10-2021 22.08.203
Name Sivaraj S/o. Velayutham Pw1

குவிமுச 311 மனுவின் பேரில் அசா1 மீண்டும் அழைத்து சத்திய பிரமாணம் செய்யப்பட்டு எதிரி தரப்பு குறுக்கு விசாரணை..

நான் தற்போது மருந்து கடை வைத்துள்ளேன். எதிரியை நான் பிறந்ததில் இருந்து எனக்கு தெரியும். எதிரியின் குடும்பத்தார் அனைவரையும் தெரியும். எதிரிக்கு நான் இரண்டு முறை பணம் கொடுத்துள்ளேன், வழக்கிற்கு முன்பு எந்த பரிவர்த்தனையும் கிடையாது என்றால் சரிதான். இந்த வழக்கு இல்லாமல் இன்னொரு வழக்கும் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். எதிரி ரமேஷ் மீது இரண்டு வழக்குகள் போட்டுள்ளேன் என்றால் சரிதான். எதிரி எந்த வருடம் ஊரை விட்டு சென்றார் என்றால் விவரம் எனக்கு ஞாபகம் இல்லை. எதிரி ரெடிமேட் கடை வைத்திருப்பது மட்டும்தான் எனக்கு தெரியும். எதிரிக்கு பணம் கொடுத்து அதை திருப்பிசெலுத்தாததால் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எதிரி, என்னிடம் இரண்டு முறை தலா ரூ.300000 ம் ஆக ரூ600000 ம் பெற்றுக்கொண்டார். வழக்கிற்காக ரூ.300000 இருமுறை கொடுத்தது தான் எதிரிக்கும், எனக்கும் உள்ள முதல் பரிவர்த்தனை ஆகும். எதிரிக்கு பணம் கொடுத்த விவரம் எனது மனைவிக்கும், சரவணனுக்கும் தெரியும். எனக்கு 4 பிள்ளைகள். மீதமுள்ள 3 பிள்ளைகளுக்கு பணம் கொடுத்த விவரம் தெரியாது. எதிரி என்னிடம் வழங்கிய காசோலை ரமேஷ் உடையதுதான். என்னிடம் காட்டப்படும் காசோலை பிரப்பிரேட்டர் ரமேஷ்என உள்ளது. வழக்கு காசோலை கம்பெனியின் காசோலை அதை நான் கவனிக்கவில்லை என்றால் சரிதான். காசோலையில் உள்ள கம்பெனி தற்போது உள்ளதா என்றால் எனக்கு தெரியாது. மேற்படி காசோலை கம்பெனி ஆரம்பிப்பதற்காக பணம் வாங்கப்பட்டதா என்றால் சரிதான். கம்பெனி ஆரம்பிக்கும்போது நான் அங்கு செல்லவில்லை. எனது வீட்டில் இருந்து எனது மகன்கள் யாரும் கம்பெனி திறப்பதற்கு செல்லவில்லை. கம்பெனி 2020 ஆண்டு ஆரம்பித்தார்கள். தேதி தெரியாது. நான் கூறுவது பொய் என்றால் சரியல்ல. CC 10-2021, CC 11-2021 என இரண்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனது பிள்ளைகள் எதிரிக்கு பணம் கொடுத்ததில்லை. எனக்கு தெரியாமலும் கொடுத்ததில்லை. நான், எதிரிக்கு 7.2.2020 தேதி ரூ.300000 மும், 23.2.2020 தேதி மற்றொரு ரூ.300000 ம் கொடுத்தேன். 2020 ல் நான் எதிரிக்கு பணம் கொடுக்கவாய்ப்பில்லை என்றால் சரியல்ல, மேற்படி இரண்டு தொகைக்கும் ஒரே தேதியில் வழக்கறிஞர் அறிவிப்பு எதிரிக்கு கொடுத்தேன் என்றால் எனக்கு தற்போது ஞாபகம் இல்லை. 10.03.2020 தேதியில் வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்தேன் என்றால் சரிதான். 10.03.2020 தேதியில் எதிரி எனக்கு ரூ.600000 ம் கொடுக்கவேண்டும், அந்த விவரத்தை வழக்கறிஞர் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். ரூ.600000 ம் என சொல்லவில்லை என்றால், தனித்தனியாக ரூ.300000 இலட்சமாக என கூறியுள்ளேன். 7.2.2020 தேதியில் எதிரிக்கு எனது வீட்டில் உளுந்தூர்பேட்டையில் வைத்து கொடுத்தேன். 7.2.2020 தேதியில் லாக்டவுன் என்றால், சரியல்ல. இந்த வழக்கு காசோலையை எந்த தேதியில் வங்கியில் செலுத்தினேன் என்றால் 12 ந்தேதி வங்கியில் செலுத்தினேன். 7 ம் தேதி ரூ.300000 ம் கொடுத்தேன் 5 நாட்களில் திருப்பி கொடுப்பதாக சொன்னார். எதிரி செக் கொடுத்தார். 5 நாட்களுக்குள் பணம் திருப்பி கொடுக்கவில்லை. அதன் பின்னிட்டு ரூ.300000 ம் எதிரி எங்கள் வீட்டில் இரண்டாவது தடவையாக வாங்கினார். முதல் தடவை வாங்கிய பணத்தை எதிரி கொடுக்காதபோது இரண்டாவது பணம் எப்படி கொடுத்தீர்கள் என்றால் முதலில் வாங்கிய காசோலை 3 ம் தேதி கொடுக்கப்பட்டது அதனால் அதற்கு முன்பு நான் இரண்டாவதாக பணம் கொடுத்தேன். 5 நாட்களில் எதிரி பணம் திருப்பி கொடுக்கவில்லை என தெரிந்தும் நான் மீண்டும் பணம் கொடுத்தேன் என்றால் சரிதான். வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. காசோலை வங்கியில் செலுத்தியபின்பு கம்பெனி கணக்கு முடிக்கப்பட்டதாக திருப்பிவந்த பிறகு, மீண்டும் இரண்டாவது காசோலை வங்கியில் எவ்வாறு செலுத்தினீர்கள் என்றால் இரண்டு காசோலைக்கும் பணம் வரும் என எதிரி சொன்னதால் நான் செலுத்தினேன். கம்பெனி கணக்கு முடிக்கப்பட்டது தெரிந்து மற்றொரு காசோலை வங்கியில் போட்டேன் என்றால் எனக்கு தெரியாது. காசோலையில் உள்ள கையெழுத்து எதிரி ரமேஷ் கையெழுத்து. காசோலையில் பூர்த்தி செய்தது எனது மருமகள். **(வழக்கறிஞர் உடல் நலம் சரியில்லாததால் கேட்டுக் கொண்டதற்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)**